**அனுப்புநர்**

திரு.மு.இராமசாமி,
M.Sc., M.Phil., B.Ed.,
இணை இயக்குநர் (மேல்நிலை),
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

**ந.க.எண். 008786/அ4–1/2019** **நாள் : 12.10.2020**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– மார்ச் 2020 பொதுத் தேர்வுகள் – செய்முறை மற்றும் கருத்தியல் தேர்வுகளின் பற்றொப்பச் சீட்டுகள் சமர்ப்பிக்க கோருதல் – தொடர்பாக.

******

மார்ச் 2020, மேல்நிலை முதலாமாண்டு, இரண்டாமாண்டு மற்றும் பத்தாம் வகுப்பு செய்முறை மற்றும் கருத்தியல் தேர்வு பணிகளில் ஈடுபட்ட ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கான மதிப்பூதியம் மற்றும் உழைப்பூதியம், தேர்வு மையங்களுக்கான சில்லரை செலவினத் தொகைகளை பட்டுவாடா செய்யும் பணியை அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களும் மேற்கொண்டு வருகின்றனர். எனினும் பல மாவட்டங்களில் மேற்கூறிய தொகைகளுக்கான பற்றொப்பச் சீட்டுகள் சம்பந்தப்பட்ட தேர்வு மைய அலுவரிடம் இருந்து பெறப்படாத காரணத்தால் அத்தொகை பட்டுவாடா செய்யப்படாமல் உள்ளது.

அரசின் விதிகள்படி முன்பணங்களை சரிகட்டும் காலக்கெடு முடிவுற்றுள்ள நிலையில் மேற்காண் செலவின்ங்களுக்கான பற்றொப்பச் சீட்டுகளை இதுநாள் வரை சமர்ப்பிக்காத தங்கள் ஆளுகைக்குட்பட்ட பள்ளிகள் / தேர்வுமையங்களை உடனடியாக உரிய அரசத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலத்தில் **20.10.2020–க்குள்** சமர்பித்து உரிய தொகையைப் பெற்றுக் கொள்ள அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், வினாத்தாள் கட்டுக்காப்பாளர், பறக்கும் படையினர் மற்றும் வழித்தட அலுவலர்களுக்கான உழைப்பூதியம் பற்றொப்பச்சீட்டுகளையும் சமர்ப்பித்து உரிய தொகையை பெற்றுக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், தணிக்கைக் குழுவின் ஆட்சேபணையைத் தவிர்க்கும் பொருட்டு அனைத்து முன்பணங்களும் இம்மாத இறுதிக்குள் சரிகட்டப்படும் என்பதால் மேற்குறிப்பிட்ட இறுதி நாளுக்கு பின் சமர்ப்பிக்கப்படும் பற்றொப்பச்சீட்டுகளின் மீது யாதொரு நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

**ஒம்/–**
**இணை இயக்குநர் (மேல்நிலை)**

**நகல்:**
அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

- **மேற்கூறிய செலவினங்களக்கான பற்றொப்பச்சீட்டுகளை சமர்பிக்கப்பட்டவுடன், அதனை சரிபார்த்து உடன் தொகை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. கூடுதல் தொகை தேவைப்படின் அப்பற்றொப்பச் சீட்டுகளை சரிபார்த்து உடன் தலைமை அலுவலத்திற்கு அனுப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**